# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 64 /2022 நாள் : 21.03.2022

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு காரணங்களால் நடைபெறாமல் காலியாக உள்ள பதவி இடங்களுக்கு நகராட்சி / பேரூராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தல் கூட்டம் பாதுகாப்பான முறையில் நடத்துவது குறித்து முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் இன்று (21.03.2022) பிற்பகல் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.**

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் பல்வேறு காரணங்களால் நடைபெறாமல் காலியாக உள்ள பதவி இடங்களுக்கு 26.03.2022 (சனிக்கிழமை) அன்று நகராட்சி / பேரூராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தல் கூட்டத்தினை சிசிடிவி பதிவு மற்றும் காவல்துறை பாதுகாப்போடு அமைதியான முறையில் நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி (Video conferencing) வாயிலாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் செயலாளர் திருமதி. எ. சுந்தரவல்லி இ.ஆ.ப அவர்கள் முன்னிலையிலும், மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் இன்று (21.03.2022) நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில் மறைமுகத் தேர்தல்களை அமைதியான முறையில் நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

1. நகராட்சிகள் / பேரூராட்சிகளில் நடத்தப்படாமல் உள்ள தலைவர் / துணைத் தலைவர் பதவியிடங்களுக்கான மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கு இவ்வாணையத்தால் வழங்கப்பட்ட அறிவுரைகளைப் பின்பற்றி தேர்தல் நடத்தும் அலுவலர் நியமனம் மற்றும் தேர்தல் பார்வையாளரை நியமனம் செய்தல் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

2. மறைமுகத் தேர்தல்கள் நடைபெறும் இடங்களில் சிசிடிவி கேமரா பொருத்தி கண்காணிப்பது, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் காவல்துறை பாதுகாப்பு மேற்கொள்ளுதல் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

3. 23.03.2022 (புதன்கிழமை) அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை பேரூராட்சி தலைவர் / துணைத் தலைவர் தேர்தல் அமைதியாக நடத்துவது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

..2..

4. 30.03.2022 (புதன்கிழமை) அன்று நடைபெறவுள்ள வார்டு குழு தலைவர்கள், நிலைக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தல் கூட்டம், மற்றும் 31.03.2022 (வியாழக்கிழமை) அன்று நடைபெறவுள்ள வரிவிதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர்கள், நியமனக்குழு உறுப்பினர்கள், ஒப்பந்தக்குழு உறுப்பினர் மற்றும் நிலைக்குழு தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தலில் சிசிடிவி பதிவு, காவல்துறையினரின் போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டதை உறுதி செய்தல் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், காவல்துறை தலைவர் (தொழில் நுட்பம்) திருமதி. மகேஸ்வரி, இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. கி. அ. சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு. க. வெங்கடேசன், உதவி ஆணையர்,(தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

21/3/2022

மக்கள் தொடர்பு அலுவலர்